# ஒருவரையொருவர் கட்டியெழுப்புதல்

Transcribed from a message spoken on November 2016 in Chennai

By *R.S.Milton*

தேவன் பறவைகளுக்குக்கூட எப்பேர்ப்பட்ட ஞானத்தை வழங்கியிருக்கிறார்! முட்டையிடுவதற்கு, குஞ்சு பொரிப்பதற்கு, அந்தக் குஞ்சுகளுக்கு உணவை ஊட்டி வளர்ப்பதற்கு, அந்தக் குஞ்சுகள் பறந்துபோகிற வரை அவைகள் மழைக்கும் வெயிலுக்கும் பாதுகாப்பாக இருப்பதற்கு, ஒரு கூடு தேவை. மிக எளிய பறவை செய்கிற ஒரு கூடுகூட, நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது, அவைகள் எங்கெங்கிருந்தோ புற்கள், இலைகள் ஆகியவைகளைக் கொண்டுவந்து, ஒன்றோடொன்று பின்னிப்பிணைத்து மிகவும் அழகாக ஒரு கூட்டைக் கட்டுகின்றன. தூக்கணாங்குருவியினுடைய கூடு மகா ஆச்சரியமாக இருக்கும்! எல்லா உயிரினங்களும் வாழ்வதற்கும், தங்கள் குணத்தை வெளியாக்குவதற்கும் அவைகளுக்கு ஓர் இல்லம் வேண்டும். பறவைகளுக்குக்கூட ஓர் இல்லம் வேண்டும்.

### சபை-தேவனுடைய இல்லம்

சபை என்பது தேவனுடைய இல்லம், தேவனுடைய வாழ்விடம், தேவனுடைய வாசஸ்தலம். தேவனுடைய இல்லம், தேவனுடைய வாழ்விடம், வெறுமனே உயிரற்ற பொருட்களால் கட்டப்படுவதில்லை; மாறாக, உயிருள்ள கற்களாகிய தேவனுடைய மக்களால் கட்டப்படுகிறது என்று அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகிறார். *"மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் நீங்களும், ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்துமூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (1 பேதுரு 2:4. 5).* நாமெல்லாரும் ஜீவிக்கிற கற்கள், உயிர்வாழ்கிற கற்கள். இந்த உயிர்வாழ்கிற கற்களைக் கொண்டு தேவன் தமக்கு ஓர் இல்லத்தை, ஒரு வாழ்விடத்தை, கட்டியெழுப்புகிறார்.

அதே எண்ணத்தை எபேசியருக்கு எழுதின நிருபத்திலும் நாம் பார்க்கிறோம். *"அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்துதாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள்ள பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டு வருகிறீர்கள்"* (எபே. 2:20-22). பரிசுத்த ஆவியானவர் இன்று ஒன்றைக் கட்டிக்கொண்டிருக்கிறார். அது, தேவனுடைய இல்லம், தேவனுடைய வாழ்விடம். "நீங்களும் ஆவியினாலே அவருடைய வாசஸ்தலமாகக்கூட்டிக் கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள்," என்று எழுதியிருக்கிறது.

ஆகையால், தேவன் இன்றைக்கு ஒரு மாபெரும் பணியை, ஒரு மகத்தான பணியை, செய்துகொண்டிருக்கிறார்; அது தேவனுடைய இல்லத்தைக் கட்டியெழுப்புவது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, *"நான் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை,"* (மத். 16:18) என்று சொன்னார்.

### தேவனுடைய இல்லத்தைக் கட்டும் பரிசுத்த ஆவியானவர்

சில வீடுகள் ஒரு புயல் அடித்தால் பறந்துபோய்விடும்; சில வீடுகள் அப்படிப் பறந்துபோவதில்லை. ஒரு தூக்கணாங்குருவியினுடைய கூட்டைக் கட்டுவதற்குரிய ஞானத்தையும், அறிவையும் தேவன் அந்தக் குருவிக்கு வழங்கியிருக்கிறார்; ஒரு காக்கைக் கூட்டைக் கட்டுவதற்குரிய ஞானம், அறிவு, திறமை ஆகியவைகளைத் தேவன் ஒரு காக்கைக்கு அருளியிருக்கிறார். அதைவிட ஆச்சரியமானது தேனீக்களுடைய கூடு. ஒரேவொரு பறவைதான் ஒரு தூக்கணாங்குருவியினுடைய கூட்டைக் கட்டுகிறது. ஒரேவொரு காகம்தான் ஒரு காக்கைக்கூட்டைக் கட்டுகிறது. ஆனால், தேனீயினுடைய கூட்டை ஒரு தேனி கட்டுவதில்லை. எத்தனை நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான தேனீக்களெல்லாம் சேர்ந்து கட்டி முடிக்கின்றன! ஆனால் கடைசியிலே எந்தக் கட்டிடநிபணனும், எந்தப் பொறியாளனும், கட்டமுடியாத ஒரு இசைவான இல்லத்தை, வாழ்விடத்தை, அவைகள் கட்டிமுடிக்கின்றன.

ஒரு அலுவலகத்தில் அறிவுள்ள ஐம்பது மின்பொறியாளர் சேர்ந்து இசைவாக ஒரு வேலையைச் செய்யமுடியவில்லை. அதிலே எத்தனையோ தப்பும் தவறுகளும் ஏற்படுகின்றன.

தேவனுடைய இல்லத்தை, தேவனுடைய வாழ்விடத்தை, தேவனுடைய வாசஸ்தலத்தை, கட்டுவதற்குரிய ஞானமும், அறிவும், திறமையும் பரிசுத்த ஆவியானவரிடம் மட்டும் உண்டு. ஆனால், பரிசுத்த

ஆவியானவர் எங்கோ வானத்தில் பறந்துகொண்டிருக்கவில்லை; பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய மக்களிடத்தில் இருக்கிறார். *"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?"* (1 கொரி. 3:16) என்று எழுதியிருக்கிறது. ஆகவே, இன்றைக்கும் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வீட்டை, தேவனுடைய இல்லத்தை, தேவனுடைய வாழ்விடத்தை, கட்டுவதற்குரிய ஞானத்தையும், அறிவையும், திறமையையும் தேவனுடைய மக்களுக்குத் தருகிறார்.

## தேவனுடைய இல்லத்தைக் கட்டும் தேவ மக்கள்

அப்போஸ்தலனாகிய பவுல் எச்சரிக்கிறதுபோல, எந்த விதமாகக் கட்டுகிறீர்கள் என்பதைக்குறித்து நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்; எச்சரிக்கையாக இருக்க வேண்டும். *"எனக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டேன். வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன். போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது"* (1 கொரி. 3:10, 11). தேவன் இன்றைக்குச் சும்மா இல்லை; தேவனுடைய மக்களாகிய நாமும் இந்த உலகத்தில் சும்மா பொழுதுபோக்கிற்காக ஏதோவொன்று செய்துகொண்டிருக்கவில்லை. நித்தியத்திற்கும் மதிப்புடைய ஒரு வேலையிலே நாம் பங்கு பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

இந்த உவமைக் கதையை நான் உங்களுக்குச் சொன்னேன். ஒரு இடத்திலே மக்கள் கல் உடைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த வழியாய்ப்போன ஒரு மனிதன், கல் உடைத்துக்கொண்டிருந்த ஒரு மனிதனிடத்திலே, "நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான். "நான் கற்களை உடைத்துக் கொண்டிருக்கிறேன்," என்று அவன் பதில் சொன்னான். இன்னொருவன் கற்களை உடைத்து, செதுக்கிக்கொண்டிருந்தான். அவனிடம், "நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான். அதற்கு அவன், "நான் ஒரு அழகான சிலையை உண்டாக்குவதற்காக இந்தக் கல்லைச் செதுக்கிக்கொண்டிருக்கிறேன்," என்று கூறினான். ஒருவனுடைய பார்வையிலே அவன் வெறுமனே கல்லை உடைத்துக்கொண்டிருக்கிறான். இன்னொருவனுடைய பார்வை கொஞ்சம் உயர்வாக இருக்கிறது. "நான் கல்லைச் செதுக்கிக்கொண்டிருக்கிறேன்," என்று சொல்லுகிறான். சிறிது தூரம் தள்ளி அந்த இடத்தில் செதுக்கிக்கொண்டிருந்த இன்னொருவரிடத்திலும், "நீங்கள் எல்லாரும் சேர்ந்து என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டான். அதற்கு அவன், "நாங்கள் ஒரு பெரிய நினைவு மண்டபத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறோம்," என்று பதில் சொன்னான். எல்லாரும் ஒரே வேலையில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், ஒருவருடைய பார்வை: நாங்கள் கல் உடைத்துக்கொண்டிருக்கிறோம்; இன்னொருவருடைய பார்வை: நாங்கள் அழகான கல்சிற்பங்களைச் செதுக்கிக்கொண்டிருக்கிறோம்; இன்னொருவருடைய பார்வை: நாங்கள் ஒரு மாபெரும் வெற்றியின் நினைவுச்சின்னத்தை, நினைவு மண்டபத்தை, கட்டிக்கொண்டிருக்கிறோம்.

நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? "நாங்கள் ஞாயிற்றுக்கிழமைக் கூடுகைக்குப் போய்க் கொண்டிருக்கிறோம். அதில் ஒன்றும் சுவாரஸ்யமான காரியங்கள் நடப்பதுபோல் இல்லை," என்பது சிலருடைய பதிலாக இருக்கலாம்.

வாழ்க்கையில் **சலிப்பு** என்பதைக்குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஒரு தருணத்தில் அல்லது இன்னொரு தருணத்தில் **சலிப்பு** நம்மைத் தாக்கும். நம்முடைய வேலையில் சலிப்பு வரும்; குடும்பத்தில் சலிப்பு வரும்; நம்முடைய சபை வாழ்க்கையில், தேவமக்களுடைய வாழ்க்கையில், விசுவாச தேவ மக்களுடைய சமுதாயத்தில், விசுவாச சமுதாயத்தின் வாழ்க்கையில், சலிப்பு வரும். பெரிய முன்னேற்றங்கள் எதுவும் நடைபெறவில்லையென்றால் இந்தச் சலிப்பு வந்துவிடும். சலிப்பைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருங்கள். கணவனைக்குறித்த சலிப்பு, மனைவியைக்குறித்த சலிப்பு, பிள்ளைகளைக்குறித்த சலிப்பு, பரிசுத்தவான்களைக்குறித்த சலிப்பு, பாடல்களைக்குறித்த சலிப்பு, செய்தியைக்குறித்த சலிப்பு, வேலையைக்குறித்த சலிப்பு; ஆகவே, அதைக்குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தேவன், கடந்த நித்தியம்தொடங்கி வரும் நித்தியம்வரை தாம் வாழ்வதற்கென்றும் தம்மை வெளியாக்குவதற்கென்றும் ஒரு மாபெரும் வாழ்விடத்தைக் கட்டியெழுப்பிக்கொண்டிருக்கிறார். அந்தக் கட்டியெழுப்புகிற பணியில், கட்டியெழுப்புகிற வேலையில், நாம் பங்குபெற்றுக்கொண்டிருக்கிறோம். ஒரு பாடலைச் சொல்லும்போது, அது வெறுமனே பாடல் இல்லை. அப்போது நான் தேவனுடைய வாழ்விடத்தை கட்டிக்கொண்டிருக்கிறேன். ஒரு மூன்று நிமிடம் என்னுடைய அனுபவத்தைப் பகிர்ந்துகொள்

ளும்போது நான் சொல்வது வெறும் சாட்சி இல்லை. அப்போது நான் தேவனுடைய வாழ்விடத்தை கட்டிக்கொண்டிருக்கிறேன். "எத்தனை தடவைதான் பாடல் பாடுகிறது," என்ற சலிப்பு வரக்கூடாது.

**கட்டியெழுப்புதல் (பக்திவிருத்தி)**

கட்டுதல் அல்லது கட்டியெழுப்புதல் என்ற வார்த்தையை வேதாகமத்தில் தேடி வாசியுங்கள். கட்டி யெழுப்புதல் என்ற வார்த்தை தமிழ் வேதாகமத்திலே 'பக்திவிருத்தி' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக் கிறது. அதிலே எந்தப் பெரிய தவறும் இல்லை. ஆனால், துல்லியமாக இருப்பதற்காகக் கட்டியெழுப்பு தல் என்று நான் சொல்லுகிறேன்.

நடைமுறையிலே, கட்டியெழுப்புவது என்றால் என்ன? ஒருவரையொருவர் கட்டியெழுப்புதல் என்று 1 தெசலோனிக்கேயரிலே வசனம் உண்டு. ஒருவரையொருவார் உற்சாகப்படுத்துங்கள், ஒருவரையொரு வர் கட்டியெழுப்புங்கள். *"தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குக் கட்டியெழுப்புதலும், புத்தி யும், ஆறுதலும் உண்டாகப் பேசுகிறான். அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்குக் கட்டியெழுப்புதல் உண்டாகப் பேசுகிறான். தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ சபைக்குக் கட்டியெழுப்புதல் உண்டாகப் பேசுகிறான்"* (1 கொரி. 14:3, 4). நீ நன்றாகப் பாஷைகளைப் பேசுகிறாய்; ஆனால், மற்றவனுக்குப் பக்திவிருத்தி இல்லையே!

இன்றைக்கு நடைமுறையிலே நாம் கட்டியெழுப்புவது என்றால் என்ன செய்கிறோம் அல்லது என்ன செய்தால் நாம் கட்டியெழுப்புகிறோம் என்று சொல்லலாம் அல்லது கட்டியெழுப்புவது என்றால் என்ன பொருள்? நடைமுறைப் பொருள் என்ன?

**கட்டியெழுப்பப்படுதல்-இரண்டு பொருள்**

கட்டியெழுப்பப்படுவது என்பது, புதிய ஏற்பாட்டிலே, இரண்டு பொருள்களிலே பயன்படுத்தப்பட்டிருக் கிறது. ஒன்று, **ஒரு நபருக்குள் கிறிஸ்துவின் அளவு பெருகுவது அல்லது கிறிஸ்து உருவாக்கப்படுவது.** அதுவும் கட்டியெழுப்பப்படுவது என்று புதிய ஏற்பாடு கூறுகிறது. இன்னொன்று மிக முக்கியமானது: **ஒன்றொடொன்று பொருந்தாததை, ஒவ்வாததை, பொருத்தமாக அல்லது ஒத்ததாக மாற்றுவதற்கு கட்டியெழுப்புவது** என்று பெயர்.

நல்ல எடுத்துக்காட்டு, இரண்டு எலும்புகளை ஒன்றோடொன்று பொருத்தி ஒத்துப்போக வைப்பதை கட்டியெழுப்புகிறது என்று சொல்லலாம் அல்லது வாதம் என்கிற வியாதி வரும்போது மூளை கொடுக் கிற கட்டளைகளுக்கு உடலினுடைய ஒரு சில பகுதிகள் ஒத்துப்போவதில்லை; அப்போது அது கட்டி யெழுப்பப்படவில்லை என்று சொல்லலாம்.

கட்டியெழுப்புவதற்கு எதிரான வார்த்தை உடைக்கப்பட்டுவிட்டது. 2 கொரிந்தியர் 13ஆம் அதிகாரம் 10ஆம் வசனத்திலே இப்படிப்பட்ட வார்த்தை இருக்கிறது: *"ஆனதால் இடித்துப்போடவல்ல, ஊன்றக் கட்டவே கர்த்தர் எனக்குக் கொடுத்த அதிகாரத்தின்படி, நான் உங்களிடத்தில் வந்திருக்கும் போது, கண்டிதம் பண்ணாதபடிக்கு, நான் தூரமாயிருந்து இவைகளை எழுதுகிறேன்."* **உங்களை உடைப்பதற்கு அல்ல உங்களைக் கட்டியெழுப்புவதற்கே தேவன் எனக்குக் கொடுத்த அதிகாரத்தின்படி...**

கட்டியெழுப்புவது என்பது இரண்டு பொருள்களிலே பயன்படுத்தப்படுகிறது. ஒன்று, **ஒரு தனி நபருக் குள் கிறிஸ்துவின் அளவு பெருகுவது.** இன்னொன்று, **நம்முடைய கூட்டுவாழ்க்கையில் ஒருவரோ டொருவர் நாம் இடைப்படுகிற விதத்திலே பொருத்தமும், ஒத்ததன்மையும், இசைவும் இருப்பது.** தனிவாழ்க்கையிலும் கட்டியெழுப்பப்படுவது நடைபெறுகிறது; கூட்டுவாழ்க்கையிலும் கட்டியெழுப்பப் படுவது நடைபெறுகிறது.

தேவனுடைய மக்களைப்பொறுத்தவரை நிச்சயமாக தனி வாழ்க்கைக்கும் கூட்டுவாழ்க்கைக்கும் நடு விலே ஒரு எல்லைக்கோடு இருக்கத்தான் செய்கிறது. தனிவாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, கூட்டு வாழ்க்கை அல்லது சமுதாய வாழ்க்கை அல்லது சபை வாழ்க்கை. நான் மூன்று சொற்களைப் பயன் படுத்துகிறேன்: தனி வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை ஆகியவைகளுக்கிடையே சில எல்லைக்கோடுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், இந்த எல்லைக்கோடுகள் ஒன்றை யொன்று வெட்டுகிற எல்லைக்கோடுகள். "இது என்னுடைய தனி வாழ்க்கை; இதற்குள் வேறு யாரும் வரமுடியாது," என்று நாம் சொல்ல முடியாது. என்னுடைய தனிவாழ்க்கையும் என்னுடைய சமுதாய வாழ்க்கையும் அல்லது சபை வாழ்க்கையும் ஒன்றோடொன்று தொடர்புபட்டுத்தான் இருக்கிறது. ஒரு பக்கம் ஒரு எல்லைக்கோடு இருக்கிறது; ஆனால், இன்னொரு பக்கம் என்னுடைய தனிவாழ்க்கை, என் சபை வாழ்க்கையைப் பாதிக்கும்; என்னுடைய சபைவாழ்க்கை, என்னுடைய தனிவாழ்க்கையை பாதிக்கும். இவைகளெல்லாம் காற்றுப் புகமுடியாத தனித்தனி அறைகள் இல்லை. "என்னுடைய தனி

வாழ்க்கை வேறு, என்னுடைய சபை வாழ்க்கை வேறு," என்று தேவனுடைய மக்கள் கூறமுடியாது. இதை நன்றாக நீங்கள் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

நாம் ஒருவரையொருவர் கட்டியெழுப்புவதைப்பற்றி நான் பேசுகிறேன். என்னை நானே கட்டியெழுப்பு வதைப்பற்றி நான் பேசவில்லை. அதுவும் இருக்கிறது. அது தனிவாழ்க்கையோடு தொடர்புடையது. ஆனால், இப்போது நான் "நாம் ஒருவரையொருவர் கட்டியெழுப்புவது எப்படி," என்பதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேன். இது நம்முடைய குடும்பத்தில் நடைபெறுகிறது. நம்முடைய சபைவாழ்க்கை யில் நடைபெறுகிறது.

இதிலே ஒரு நல்ல அழகான சங்கதி என்னவென்றால், பொதுவாக சபை வாழ்க்கையிலே கட்டியெழுப் பப்படுவதைப்பற்றிய எல்லா உண்மைகளும் நம்முடைய குடும்ப வாழ்க்கையில் கட்டியெழுப்பப்படு வதற்கும் பொருந்தும். குடும்ப வாழ்க்கையிலே கட்டியெழுப்பப்படுவதற்கு உரிய எல்லா உண்மைகளும் சபை வாழ்க்கையிலே கட்டியெழுப்பப்படுவதற்கும் பொருந்தும். நீங்கள் கேட்கலாம், இது மிக முக் கியமா? மிக முக்கியம். ஏனென்றால், கூடு கட்டாமல் நாம் முட்டைகளை அங்கு இடமுடியாது; குஞ்சுகள் பொரிக்கமுடியாது. குஞ்சுகளை நாம் ஊட்டி வளர்க்க முடியாது. தேவ மக்களாலான, விசுவாசி களாலான ஒரு சமுதாயம் அல்லது ஒரு சபை ஏற்ற விதத்திலே கட்டியெழுப்பப்படவில்லையென்றால், அவர்களை நம்பி தேவன் புதியவர்களை அங்கு கொண்டுவரமுடியாது. புதியவர்கள் நம்மைப் பார்த்து விட்டு ஒருவேளை, "இந்தக் கிறிஸ்தவர்கள் சொல்கிறபடி வாழலாம்; ஆனால் இவர்கள் வாழ்கிறபடி வாழக்கூடாது," என்று சொல்லவேண்டியிருக்கும்.

பொதுவாக நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை தற்காத்துக்கொள்வதற்காக, "நீங்கள் மற்ற கிறிஸ்தவர்களைப் பார்க்காதீர்கள்; இயேசுகிறிஸ்துவை மட்டும் பாருங்கள்," என்று சொல்லவேண்டியிருக்கிறது. இது ஒருவிதத்திலே நல்ல தற்காப்புதான், ஆனால் மிகவும் பலவீனமான தற்காப்பு. நாம் மிகவும் உயர்ந்த விதத்திலே பேசுவதாக நினைத்துக்கொண்டு, "கிறிஸ்தவர்களைப் பார்க்கவேண்டாம்; இயேசு கிறிஸ்துவைப் பார்த்தால் போதும்," என்று சொல்லுகிறோம். இயேசு கிறிஸ்துவை எங்கு போய்ப் பார்ப்பது? இயேசுகிறிஸ்துவை யாரில்தான் பார்க்கமுடியும்? நம்மில்தான் பார்க்கமுடியும். நம்முடைய பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்காக, "இயேசு கிறிஸ்துவை நீங்கள் பாருங்கள்; கிறிஸ்தவர்களைப் பார்க்கவேண்டாம்," என்று சொல்வது மிகவும் தாழ்வான வாதம். "இயேசு கிறிஸ்துவைப் பார்க்க வேண்டுமா? நீங்கள் எங்களிடையே வாருங்கள்," என்று சொல்கின்ற துணிவு நமக்கு இருக்க வேண்டும்.

ஒருவரையொருவர் கட்டியெழுப்புவது என்றால் என்னவென்பதைப்பற்றிய அறிவு தேவனுடைய மக்க ளுக்கு மிகவும் குறைவு. ஒரு கூடுகைக்குப் போய், ஒரு நல்ல பாடகன் தன்னுடைய பாடல் திறமை யினாலே உணர்ச்சிவசப்படுத்தக்கூடிய ஒரு பாடல் பாடியபிறகு, ஒரு செய்தியைக் கேட்டவுடனே தேவ னுடைய மக்கள் கட்டியெழுப்பப்படுகிறார்கள் என்று அவர்கள் நினைக்கின்றார்கள்; அது தவறு. கட்டியெழுப்பப்படுவதிலே அவைகளுக்கு ஒரு பங்கு உண்டு. ஆனால், அவைகள் மட்டுமே நடைபெறு வதால் நாம் கட்டியெழுப்பப்படுவது இல்லை. கட்டியெழுப்பப்படுவது என்பது தேவனுடைய மக்கள் எல்லாரும் ஒருவரோடொருவர் உறவாடுவதைப் பொறுத்தது.

### கிறிஸ்துவைப் பரிமாறுவதால் கட்டியெழுப்பப்படுதல்

நாம் ஒருவரையொருவர் கட்டியெழுப்புவது என்றால் என்ன? நாம் ஒருவருக்கொருவர் கிறிஸ்துவைப் பரிமாறுகிற விதத்திலே நாம் ஒருவரோடொருவர் இடைப்பட வேண்டும் அல்லது உறவாடவேண்டும். இந்த வரையறையை, இந்த விளக்கத்தை, உங்கள் மனதில் வைத்து புதிய ஏற்பாட்டிலுள்ள நிரு பங்களையெல்லாம் வாசித்துப் பாருங்கள். ஒருவரையொருவர் கட்டியெழுப்புவது என்றால் என்ன? **நாம் ஒருவருக்கொருவர் கிறிஸ்துவைப் பரிமாறுகிற விதத்தில் ஒருவரோடொருவர் உறவாட வேண்டும் அல்லது இடைப்பட வேண்டும்.** நாம் உறவாடலாம், ஆனால் அங்கே எந்தக் கிறிஸ்துவும் பரிமாறப் படாமல் போகலாம். "உங்கள் வீட்டிலே என்ன குழம்பு வைத்தீர்கள்? கத்தரிக்காய் குழம்பா? எங்கள் வீட்டிலே வெண்டைக்காய் குழம்பு. அப்புறம் அந்தத் துணி எங்கே வாங்கினீர்கள்? இங்கே அதே துணி பத்து ரூபாயக்கு கிடைக்கிறது," என்று பல மணி நேரம் உரையாடலாம். சாப்பாடு, துணிமணி, சர்க்கரை, கோதுமை ஆகியவைகளைக்குறித்துப் பேசாமல் இருக்க முடியுமா? நாமெல்லாரும் தேவ தூதர்கள்போல, "நீங்கள் நேற்று என்ன ஊழியம் செய்தீர்கள்? நேற்று முன்தினம் யாருக்குக் கிறிஸ்து வைப் பரிமாறினீர்கள்? யாருக்காக ஜெபம் பண்ணினீர்கள்?" என்றுதான் பேச வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால், இயற்கையான உரையாடல்கள் அரைமணிநேரமோ, ஒரு மணிநேரமோ அல்லது வாழ்க்கை முழுவதுமோ நடந்தாலும், எந்தக் கிறிஸ்துவும் ஒருவருக்கொருவர் பரிமாறப்படாமல் போகிற வாய்ப்பு உண்டு.

நான் இப்போது மிகவும் மென்மையான, நுட்பமான, தளத்தில் நடக்கிறேன். “நம்முடைய உறவாடல்கள் இயற்கையான உறவாடல்களாக இருக்கக்கூடாதா? இயற்கையாக இருக்கக்கூடாதா? நாம் இயல்பாக இருக்கவேண்டும் என்றுதானே எல்லோரும் சொல்கிறார்கள்,” என்று நீங்கள் நினைக்கலாம். இயற்கை யான உலகத்திற்குரிய தளத்திலே தேவனுடைய மக்கள் ஒருவரோடொருவர் உறவாடுவதால் எந்தக் கிறிஸ்துவும் பரிமாறப்படுவதில்லை.

கத்தோலிக்கர் கூடிவருகிறார்கள்; சிஎஸ்ஐ மக்கள் கூடிவருகிறார்கள். எல்லாரும் தேவனுடைய மக்கள் என்று நான் ஒத்துக்கொள்ளவில்லை. யாரையும் காயப்படுத்திவிடக்கூடாது என்பதற்காக ஏதோவொரு கட்டிடத்திற்குள் கூடிவருகிற எல்லாரும் தேவனுடைய மக்கள் என்று நான் ஒப்புக்கொள்வதில்லை. மனந்திரும்பி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் தங்கள் விசுவாசத்தை வைத்தவர்கள் மட்டுமே தேவனுடைய பிள்ளைகள் என்று நாம் விசுவாசிக்கிறோம். அங்கு போகிற கூட்டத்திலே தேவனுடைய மக்கள் சிலர் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் எல்லாரும் ஒருவரோடொருவர் கட்டப்படுகிறார்கள் என்று எந்த உத்தரவாதமும் இல்லை. ஆகவே, உண்மையிலேயே நம்முடைய கூடுகைகள்மூலமாகவும், நம்முடைய சமுதாய வாழ்க்கைமூலமாகவும் நாம் ஒருவரையொருவர் கட்டியெழுப்புகிறோமா என் பதைக்குறித்து நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இந்தக் கேள்விக்கு நாம் பதிலளிக்க வேண்டும்.

ஒரு சமுதாய வாழ்க்கை இல்லாமல் இருப்பது மிகவும் வசதியானது; ஆனால், அது ஆபத்தானதும்கூட. ஒரு சமுதாய வாழ்க்கையிலே ஒருவரோடொருவர் நாம் இடைப்படும்போது, உறவாடும்போது, பகிர்ந்து கொள்ளும்போது, பரிமாறும்போது, போக்குவரத்து கொடுக்கல் வாங்கல்போன்றவைகள் இருக்கும் போது, அங்கு பல சிக்கல்கள் எழும். “சிக்கல்கள் எழும் என்று எனக்குத் தெரியாது,” என்று யாராவது நினைத்தால், உங்களுடைய புரிந்துகொள்ளுதல் தவறானது. **எந்த மக்கள் சமுதாயமாக இருந்தாலும் சரி, தேவமக்களாலான சமுதாயமாக இருந்தாலும் சரி, எங்கு இடைப்பாடுகள், உறவாடல்கள், பகிர்ந்து கொள்ளுதல், பரிமாற்றம், போக்குவரத்து, கொடுக்கல் வாங்கல் ஆகியவைகளெல்லாம் இருக்கின் றதோ, அங்கெல்லாம் சிக்கல்கள் வரும்.** ஏனென்றால், நாம் இன்னும் முற்றுமுடிய கிறிஸ்துவை மையமாகக்கொண்ட வாழ்க்கை வாழ்ந்துவிடவில்லை. உலகம், மாம்சம், சுயம் ஆகியவைகள் இன்னும் நமக்குள் கோலோச்சுகின்றன. அளவு குறையலாம்; ஆனால், இன்னும் கோலோச்சுகின்றன; ஆளுகை செய்கின்றன.

இயற்கையான எல்லா உறவாடல்களும் கிறிஸ்துவைப் பரிமாறுவது அல்ல. தேவமக்களுடைய சமு தாயத்திற்கு வெளியே நமக்கு ஒரு சமுதாய வாழ்க்கை இருக்கிறதா? இருக்கிறது. நாம் அறிவற்ற வர்களாயிருக்கக்கூடாது. நமக்கு உறவினர்கள் உண்டு; நாம் வேலை பார்க்கிற இடத்திலே ஒரு சமுதாய வாழ்க்கை உண்டு. அந்த சமுதாய வாழ்க்கையை நாம் எப்படிக் கையாளுவது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். வேலை பார்க்கிற இடத்திலே ஒரு விழா வைத்தால் நாம் போகவேண்டும். ஆனால், இவைகளையெல்லாம் கவனத்தோடு கையாளவேண்டும். அப்படியே கண்மூடித்தனமாக நாம் எதையும் செய்யக்கூடாது.

### 1. நாம் சேர்ந்து வாழ்வதற்காக அழைக்கப்பட்டவர்கள்

நான் ஒரு சில மிக முக்கியமான எண்ணங்களை மட்டும் உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன். முத லாவது, **தேவனுடைய மக்களாகிய நாம் சேர்ந்து வாழ்வதற்காக அழைக்கப்பட்டவர்கள்.** *கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய் தார்,”* (எபே. 2:7). நாம் எல்லோரும் சேர்ந்து அவரோடேகூட உயிர்ப்பிக்கப்பட்டு, சேர்ந்து அவரோடே கூட உன்னதங்களிலே அமர்த்தப்பட்டிருக்கிறோம். நான் மட்டும் கிறிஸ்துவோடு சிலுவையிலறையப் பட்டு, கிறிஸ்துவோடு உயிர்ப்பிக்கப்பட்டு, கிறிஸ்துவோடு உன்னதத்திலே உட்கார்ந்திருக்கவில்லை. தேவனுடைய மக்கள் எல்லாரும் சேர்ந்து நாம் சிலுவையிலறையப்பட்டோம்; சேர்ந்து கிறிஸ்துவுடனே உயிரோடு எழுப்பப்பட்டோம்; சேர்ந்து கிறிஸ்துவுடனேகூட உன்னதங்களிலே அமர்த்தப்பட்டிருக்கிறோம்.

நான் சொல்வதை நன்றாய்க் கவனியுங்கள். ஒரு பக்கம் நடைமுறைக்குரிய காரியம், இன்னொரு பக்கம் வேதத்தை எப்படி பொருள்விளக்கம் செய்வது என்பதைப்பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தேவனுடைய மக்கள் எல்லாவற்றையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள் என்று அப்போஸ்தலர் முதல் ஐந்து அதிகாரங்களிலே எழுதியிருக்கிறது. “ஆதி சபையிலே பரிசுத்த ஆவியினுடைய வல்லமை இருந்தது. ஏனென்றால், அவர்கள் எல்லாவற்றையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள். அதுதான் முன்மாதிரி. ஆகவே, இன்றைக்கும் நாம் எல்லாவற்றையும் பொதுவாய் வைத்து அனுபவிக்க வேண்

டும்," என்ற முடிவுக்கு நாம் வரலாமா என்றால் வரமுடியாது, வரக்கூடாது. ஏனென்றால், அந்தப் பழக்கத்தை அப்போஸ்தலர் நடபடிகள் முதல் 5 அதிகாரங்களில்தான் பார்க்கிறோமேதவிர அதற்குப் பின்வருகின்ற சபை வாழ்க்கையிலே அந்தப் பழக்கம் இல்லை. எடுத்துக்காட்டாக, எருசலேமிலே பஞ்சம் வந்தபோது, அப்போஸ்தலனாகிய பவுல், "எருசலேமிலே பரிசுத்தவான்கள் பஞ்சத்தில் இருப்பதால், நீங்கள் எல்லாரும் பொருளுதவி செய்யுங்கள்," என்று மத்தியதரைக்கடல் நாடுகளைச் சுற்றியுள்ள சபைகளுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அவர்கள் எல்லாவற்றையும் பொதுவாய் வைத்து அனுபவித்திருப்பார்கள் என்றால், "பொருளுதவி செய்யுங்கள்" என்று கேட்கவேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, சபையின் மிகத் தொடக்கக் கட்டத்தில்தான் அவர்கள் எல்லாவற்றையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள்.

ஆனபோதிலும்கூட, எல்லாவற்றையும் பொதுவாய் வைப்பதும், ஒருவரோடொருவர் பகிர்ந்துகொள்வதும் ஆதி சபைக்கு மட்டுமல்ல, சபையின் எல்லாக் கட்டங்களுக்கும் பொருந்தும். நன்றாய்க் கவனிக்க வேண்டும், "எல்லாவற்றையும் பொதுவாய் வைத்தல்" என்பது சட்டம் இல்லை. ஆனால், எல்லாவற்றையும் பொதுவாய் வைப்பது, பகிர்ந்துகொள்வது என்கிற ஆவிக்குரிய கோட்பாடு எல்லாக் காலங்களிலும் சபைக்குப் பொருந்தும். 2 கொரிந்தியர் 8, 9ஆம் அதிகாரங்களிலே சபையினுடைய எல்லாக் காலங்களுக்கும் பொருந்தக்கூடிய ஆவிக்குரிய கோட்பாடுகள் எழுதப்பட்டிருக்கின்றன. அந்தக் கோட்பாடு, "*சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான்; பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்*" (2 கொரி. 9:7) என்று பவுல் சொல்லுகிறார்.

நிச்சயமாக அது பொருளாதார ஆசீர்வாதத்தைப்பற்றிச் சொல்லவில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வங்கி நடத்தவில்லை. "நீங்கள் சிறுக விதைத்தால் சிறுக அறுப்பீர்கள்; பெருக விதைத்தால் பெருக அறுப்பீர்கள்," என்று அவர் உலகப்பிரகாரமான ஆசீர்வாதத்தைப்பற்றிச் சொல்லவில்லை என்று நான் உறுதியாகச் சொல்வேன்.

இந்த உலக ஆசீர்வாதங்களைச் சிறுக விதைத்தால், நீங்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைச் சிறுகத்தான் பெறுவீர்கள்; இந்த உலக ஆசீர்வாதங்களைப் பெருக விதைத்தால், நீங்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெருக அறுவடை செய்வீர்கள். உலக ஆசீர்வாதங்களைப்போல ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் அவ்வளவு வசீகரமாக இருக்கிறதா? "நீங்கள் பத்தாயிரம் ரூபாய் கொடுத்தால், கர்த்தர் உங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் தருவார்," என்று சொன்னால் அல்லேலுயா சொல்வார்கள். "நீங்கள் பத்தாயிரம் ரூபாய் கொடுத்தால், உங்களுக்குள்ளே கிறிஸ்துவின் அளவு ஒரு அலகு கூடிவிடும்," என்று சொன்னால் எத்தனைபேர் அல்லேலூயா சொல்வார்கள்? "ஆ! அந்தக் கிறிஸ்துவைக்கொண்டு இப்பொழுது என்ன செய்யமுடியும்? குறைந்தது நூறு ரூபாய், ஐம்பது ரூபாய் கிடைத்தால் அதை வைத்தாவது ஏதாவது செய்யமுடியும்," என்றுதான் மக்கள் நினைப்பார்கள். "உங்களுக்குள் கிறிஸ்துவின் அளவு பெருகுவதையே நான் நாடுகிறேன்," என்று சொன்னால், "கிறிஸ்துவின் அளவு பெருகுவதைப்பற்றிய செய்தியை நான் எங்கேயாவது கேட்டுத் தெரிந்துகொள்கிறேன்; ரூபாய் பெருகுவதற்கு ஏதாவது வழி இருந்தால் சொல்லுங்கள்," என்பதுதான் பலருடைய எண்ணம்.

தேவனுடைய மக்களாகிய நாம் சேர்ந்து வாழ்வதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம். இது முதலாவது குறிப்பு. ஞாயிற்றுக்கிழமை கூடுகைதான் சேர்ந்து வாழ்வது என்பதல்ல. ஆனால், ஞாயிற்றுக்கிழமை கூடுகைகளையும் அல்லது ஒரு சமுதாய வாழ்க்கையின் பல்வேறு கூடுகைகளையும் சேர்ந்து வாழ்வதின் ஒரு பகுதியாக நான் கருதுகிறேன். ஞாயிற்றுக் கிழமை கூடுகையினுடைய மாதிரிவடிவம் எப்படி இருக்க வேண்டும் என்பதைப்பற்றிப் புதிய ஏற்பாட்டிலே எங்கும் சொல்லப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் "அவர்கள் வீடுகளிலே கூடிவந்தார்கள் என்பதை நான் ஒரு மாதிரிவடிவமாக எடுத்துக் கொள்ளவில்லை. நாம் வீடுகளில் கூடி வரலாம்; பள்ளிக்கூடங்களில் கூடி வரலாம்; கட்டிடங்களில் கூடி வரலாம்; ஆனால் உறவாடுகிற விதம் கிறிஸ்துவைப் பரிமாறும் விதத்தில் இல்லையென்றால், கூடிவருகிற இடம் ஒரு பொருட்டல்ல. சிலர் கட்டிடங்களில் கூடிவரலாம்; ஆனால் கிறிஸ்துவைப் பரிமாறுகிற வண்ணமாக அவர்கள் உறவாடலாம். சிலர் வீடுகளிலே கூடிவரலாம், ஆனால், கிறிஸ்துவைப் பரிமாறுகிற வண்ணத்திலே அவர்கள் உறவாடாமல் போகலாம். ஆகையால், "நாங்கள் வீடுகளிலே கூடிவருகிற புதிய ஏற்பாட்டு சபை," என்று வீணாக ஒரு நாளும் பெருமைபாராட்ட வேண்டாம்.

**2. கூட்டுவாழ்க்கையில் நம் பொறுப்புகள்**

இரண்டாவது, கூட்டு வாழ்க்கையிலே அல்லது நம்முடைய சமுதாய வாழ்க்கையிலே, நமக்குப் பொறுப்புகள் உண்டு. நம்முடைய சமுதாய வாழ்க்கையைப்பற்றிச் சொல்லும்போது அது நம்முடைய குடும்ப வாழ்க்கைக்கும் பொருந்தும்.

சில பொறுப்புகள் கூட்டானது. ஒரு மேஜையை இங்கிருந்து அங்கு தூக்கி வைப்பது ஒரு கூட்டுப் பொறுப்பு. இதிலே என்னுடைய பொறுப்பு நான்கில் ஒரு பங்கு என்று யாரும் பங்கு போட்டுத் தர முடியாது. நான்கு பேரும் தத்தம் பங்கைச் செய்தால்தான் அந்த மேஜையை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குத் தூக்கி வைக்க முடியும்.

அதுபோல, பல பொறுப்புகளுடைய தன்மை, அது தனிப் பொறுப்பல்ல, அது கூட்டுப்பொறுப்பு. நான்கு பேரல்ல, நாற்பது பேர் சேர்ந்து அதைச் செய்யவேண்டியிருக்கும். ஒரு கூடுகை நடத்த வேண்டும் அல்லது அடுத்த வருடத்திற்காக நாம் ஒரு திட்டமிட வேண்டுமென்றால், நாம் நாற்பது பேரும் சேர்ந்து திட்டமிட வேண்டும். என்னுடைய பங்கு என்னவென்று கணிப்பது மிகவும் முக்கியம். ஒரு நல்ல சபை வாழ்க்கை அல்லது தேவனுடைய வாழ்விடம் கட்டியெழுப்பப்படுகிறது என்றால், அங்கு தேவனுடைய மக்கள் தங்கள் பங்கை எடுப்பதற்கு கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள். சிறு குழந்தைகள் தொடங்கி பெரியவர்கள்வரைக்கும் தங்கள் பங்கைச் செய்வதற்குக் கற்பிக்கப்படுகிறார்கள். நாம் அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். நாமும் பயிற்சி பெற வேண்டும்.

கூட்டுப்பொறுப்பிலே அவரவர் தங்கள் தங்கள் பங்கை மனமுவந்து எடுத்துக்கொள்ள வேண்டும். "*சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய் அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள். அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்து வைக்கும்*" (நீதி. 6:6-8). இந்த வசனங்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். யார் முதன்மைப் பாஸ்டர் எறும்பு, யார் துணை பாஸ்டர் எறும்பு, யார் மூப்பர் எறும்பு, அதில் யார் வயதான மூப்பர் எறும்பு, யார் உதவிக்காரர், யார் உடன் வேலைக்காரர், யார் பொறுப்புள்ள சகோதரர் என்று தேனீக்களோ, எறும்புகளோ ஒன்றோடொன்று கலந்தாலோசிப்பதில்லை. "இவர்களிலே யார் தலைவன் அல்லது மூத்தவன்" என்று வெளிப்படையாகச் சொல்லாமலேயே ஒரு சமுதாயம் வாழுமென்றால், தேவனுடைய பார்வையிலே அதைப்போன்ற அருமையான, விலையேறப்பெற்ற, சமுதாயம் வேறொன்றும் இல்லை. "இந்த சமுதாயத்திலே இன்னார் இன்னார்தான் தலைவர்கள், மூத்தவர்கள், நடத்துபவர்கள் என்று ஒரு நாளும் நாங்கள் வெளிப்படையாக அறிவித்தது இல்லை. ஆனால், பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும் இந்த சமுதாயத்தில் ஒவ்வொருவரும் தத்தம் பங்கை நேர்த்தியாய் நிறைவேற்றுகிறார்கள்," என்பதுபோன்ற ஒரு சமுதாயம் இருந்தால் அது பாக்கியமான சபை.

"புதிய உடன்படிக்கையிலே கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவனும் தன் சகோதரனுக்குப் போதிக்க வேண்டியதில்லை என்று 1 யோவான் 2:27 போதிக்கிறது. *நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக* என்று அந்த வசனம் சொல்லுகிறது. அதனால் ஒருவனும் எனக்குப் போதிக்க வேண்டியதில்லை. நீங்கள் இதையெல்லாம் சொல்ல வேண்டியதில்லை," என்று ஒரேவொரு வசனத்தை உருவி ஆவிக்குரிய தற்கொலை செய்துகொள்கின்ற மக்களுடைய எண்ணிக்கை அதிகம்.

கூட்டுப் பொறுப்பிலே தங்கள் பங்கு என்ன என்பதைப் பரிசுத்த ஆவியினாலே தேவனுடைய மக்கள் போதிக்கப்பட்டிருப்பார்கள் என்றால் அது மிகவும் மிகவும் அருமையானது. "இந்த நாற்காலியைத் தூக்கி வைப்பது என்னுடைய பங்கா, ஒரு ஃபோன் பண்ணுவது என்னுடைய பங்கா, ஒரு ஆலோசனை கொடுப்பது என்னுடைய பங்கா, ஒரு வேலையைச் செய்வது என்னுடைய பங்கா?" என்பதை நாம் பரிசுத்த ஆவியினாலே போதிக்கப்படவேண்டும்.

2 கொரிந்தியர் 8, 9 நம்முடைய மனப்பாடப் பகுதிகளிலே சேர்த்துக்கொள்ள வேண்டிய இரண்டு முக்கியமான அதிகாரங்கள். "நீங்கள் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்கு பொருளுதவி செய்யுங்கள்," என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும்போது, ஒரு நல்ல ஆலோசனை சொல்கிறார். எவ்வளவு கொடுக்கவேண்டும்? "எல்லாரும் ஒரு மாதச் சம்பளத்தைக் கொடுத்துவிடுங்கள்," என்று சொன்னால் எவ்வளவு எளிதாக இருக்கும்! "ஒரு மாதச் சம்பளத்தைக் கொடுத்தால் கர்த்தர் உங்கள்மீது பிரியமாயிருப்பார்," என்று சொன்னால் நம்முடைய மனச்சாட்சி மிகவும் ஆறுதலடைந்து விடும். "அப்பாடா! ஒரு மாதச்சம்பளத்தைக் கொடுத்தேன்; கண்டிப்பாக கர்த்தர் ஆசிர்வதிப்பார்; என்னுடைய மகனுக்கு, எனனுடைய மகளுக்கு, வேலை கிடைத்துவிடும்; நான் ஓய்வுபெற்றபிறகு எனக்குச் சாப்பாட்டுக்கத் திண்டாட்டம் இருக்காது," என்று ஒருவேளை நாம் நினைக்கலாம். அப்படியல்ல.

பவுல் "சமநிலைப் பிரமாணம்" என்ற ஒரு கோட்பாட்டைக் கொடுக்கிறார். உன்னிடத்தில் நிறைவாக இருக்கிறதென்றால், குறைவுபடுகிறவர்களோடு அதை நீ பகிர்ந்துகொள். ஒரு எடுத்துக்காட்டு சொல்

வேன். ஒரு மாநாடு நடைபெறுகிறது என்று வைத்துக்கொள்வோம். நாம் ஐம்பது பேர் இருக்கிறோம். மொத்தம் ஒரு லட்சம் ரூபாய் செலவாகிறதென்றால், ஆளுக்கு இரண்டாயிரம் ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், எப்படிக் கணக்குப் போடவேண்டும் என்றால், சமநிலைப் பிரமாணத்தின் படி போடவேண்டும். என்னிடம் நிறைய இருக்கிறது. என்னால் பத்து சகோதரர்களுக்குரிய பணத்தைக் கொடுக்க முடியும். அப்படியானால் நான் 20000 ரூபாய் கொடுக்க வேண்டும். ஒரு லட்சத்துக்குமேல் சேர்ந்துவிட்டால் என்ன செய்வது? *"மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை; கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்கு குறைவானதுமில்லை"* (2 கொரி. 8:14). ஒரு சகோதரனால் இரண்டாயிரம் ரூபாய் கொடுக்க முடியாது; நூறு ரூபாய்தான் கொடுக்க முடியும் என்றால், பரவாயில்லை. ஒன்றுமே கொடுக்காமல் இருப்பது ஆபத்தானது.

**நம் பங்கை நிறைவேற்றுதல்**

கூட்டுப் பொறுப்புகளில் நாம் நம்முடைய பங்கை எடுக்கப் பயில வேண்டும். ஒரு கூடுகையை நாம் நம்முடைய வீட்டிலே நடத்தும்போது, அதற்கு நம்முடைய இருதயத்தையும், நம்முடைய உடலையும், நம்முடைய நேரத்தையும் ஒதுக்கி வைத்துக்கொள்ள வேண்டும், ஆயத்தம்பண்ணிக்கொள்ள வேண்டும். ஆயத்தம் என்றால், சனிக்கிழமை ஆறு மணிமுதல் ஞாயிற்றுக்கிழமை ஆறு மணிவரை, என்னுடைய நேரம், என்னுடைய உடல், என்னுடைய கவனம் ஆகியவைகளெல்லாம் கூடுகையிலே இருக்க வேண்டும். என்னுடைய மனதை வேறொரு இடத்தில் வைத்துக்கொண்டு இந்த வேலையைச் செய்தால், இந்த வேலை எனக்கு மிகவும் சுமையாக மாறிவிடும். இந்தக் கூடுகையை என்னுடைய வீட்டிலே நடத்த நான் தீர்மானித்திருப்பதால், வேறு எந்த வேலையைப்பற்றியும் நான் சிந்திக்கப் போவதில்லை.

"இதற்கு என்ன பலனுண்டு?" என்று நீங்கள் கேட்கலாம். கர்த்தருடைய பெட்டி ஓபேத்ஏதோமுடைய வீட்டில் இருந்தது. கர்த்தர் ஓபேத்ஏதோமின் வீட்டை ஆசீர்வதித்தார். நான் அவ்வளவு சீக்கிரத்தில் இது போன்ற ஆசீர்வாத வாக்குறுதி கொடுப்பதில்லை. தேவனுடைய சாட்சிக்காக, நற்செய்திக்காக, தேவனுடைய பணிவிடைக்காக, நம்முடைய வீடு நம்முடைய நேரம் நம்முடைய உடல் நம்முடைய உழைப்பு, மிகவும் முக்கியமாக நம்முடைய கவனம், ஆகியவைகளை நாம் ஒதுக்கும்போது, *"என் சம்பத்தை நான் சேர்க்கும் அந்நாளிலே...தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள்,"* (மல். 3:17-18) என்று கர்த்தர் சொல்லுகிறார். "என்னைச் சேவிக்கிறவர்கள் எனக்கு விலையேறப்பெற்ற சம்பத்தாக இருப்பார்கள்," என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"நான் இயேசு கிறிஸ்துவைச் சேவித்தேன்; அவர் எனக்குக் கடனாளி" என்று எந்த மனிதனும் சொல்கிற நிலைமையிலே தேவன் ஒருநாளும் விட்டுவைக்க மாட்டார். இந்தப் பங்கை எடுப்பதற்கு எனக்குத் திராணி இருக்கிறது. ஆகவே, அந்தப் பங்கை நான் எடுத்துக்கொள்கிறேன். எந்த எதிர்பார்ப்புகளுடனும் அந்தப் பங்கை நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது.

அகலக் கால் வைக்கலாமா? வைக்கலாம். *"அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்,"* (2 கொரி. 8:2) என்ற வசனத்தை நாம் பலமுறை வாசித்திருக்கிறோம். தேவனுக்காக நாம் அகலக் கால் வைக்கலாம் என்று இந்த வசனம் சொல்லுகிறது. ஒரு பக்கம் நாம் அகலக்கால் வைக்கக்கூடாது; இன்னொரு பக்கம் அகலக்கால் வைக்கலாம். "வைக்கலாம் அல்லது வைக்கக்கூடாது என்று தெளிவாகச் சொல்லுங்கள். அகலக்கால் வைக்கக்கூடாது என்றும் சொல்லுகிறீர்கள். அகலக்கால் வைக்கலாம் என்றும் சொல்லுகிறீர்கள். நீங்கள் குழப்புகிறீர்கள். தெளிவாகச் சொல்லுங்கள்," என்று நீங்கள் கேட்கலாம்.

"இது என் திராணிக்கு உட்பட்டது. எனவே, இதைச் செய்தேன். இது என்னுடைய திராணிக்கு மிஞ்சினது; நான் இதைச் செய்தேன். இந்த மாதிரி இடங்களில் என் திராணிக்கு உட்பட்டு பாதி பயன்படுத்தினால் போதும்," என்று நம்முடைய கையில் ஒரு பட்டியல் இருக்கவேண்டும். தேவனை சேவிக்கிற காரியத்தில் திராணிக்குக் கொஞ்சம் அதிகமாகவே பயன்படுத்தலாம். *"ஆதலால், நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்புகூருகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூரப்பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன்"* (2 கொரி. 12:15). ஆத்துமாக்களுக்காக செலவுபண்ணுவது, அது திராணிக்கு உட்பட்டது. ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணப்படுவது, அது திராணிக்கு அப்பாற்பட்டது. ஒதுக்கி வைத்திருப்பதற்கும் மிஞ்சி தேவனுக்காகச் செலவழிக்கவேண்டியிருக்கும். அந்த நிலைமை வரும்போது நாம் அதிர்ச்சியடையக் கூடாது. மாறாக, மகிழ்ச்சியடைய வேண்டும்.

### 3. பொறுப்புகளைப் பகிர்ந்தளிக்கும் ஒருங்கிணைப்பாளர்கள்

மூன்றாவது குறிப்பு, இப்படியிருந்தபோதும்கூட நம்முடைய சமுதாய வாழ்க்கையிலே சில பல காரியங்களிலே ஒருங்கிணைப்பாளர்கள் அவசியம். "இவ்வளவு நேரம், எல்லாம் பரிசுத்த ஆவியிலே செய்ய வேண்டும், அப்படிச் செய்யவேண்டும், இப்படிச் செய்யவேண்டும் என்று சொல்லிவிட்டு, கடைசியில் நீங்களும் ஏற்பாடு, நிர்வாகம், நிறுவனம், ஸ்தாபனம்மாதிரி, இவர்தான் ஒருங்கிணைப்பாளர் என்று சொல்கிறீர்களே?" என்று நீங்கள் நினைக்கலாம். எருசலேமில் பஞ்சத்தில் உள்ள பரிசுத்தவான்களுக்காக எல்லாரும் காணிக்கை கொடுக்கிறார்கள். அந்தக் காணிக்கை எருசலேமுக்கு எப்படிப் போகும்? "*கர்த்தருக்குமுன்பாக மாத்திரமல்ல, மனிதருக்குமுன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிற ஒரு சகோதரன்... மேலும், அநேகக் காரியங்களில் ஜாக்கிரதையுள்ளவனென்று நாங்கள் பலமுறை கண்டறிந்தவனும், இப்பொழுது உங்கள்மேலுள்ள மிகுந்த நம்பிக்கையினாலே அதிக ஜாக்கிரதையுள்ளவனுமாகிய நம்முடைய சகோதரனையும்*" என்று பவுல் சிலரைக்குறித்துச் சொல்லுகிறார். அப்படிப்பட்டவர்கள்மூலமாக அந்தக் காணிக்கையைக் கொடுத்தனுப்புகிறார்கள். ஒருவன் எப்படிப்பட்டவன் என்று கர்த்தருக்கு மட்டும் தெரிந்தால் போதும் என்று சிலர் நினைக்கலாம். போதாது. கர்த்தருக்கு மட்டும் தெரிந்தால் போதாது. மனிதர்களுக்கும் தெரியவேண்டும்,

"இவர்கள் எல்லாவற்றையும் நேர்த்தியாகச் செய்கிறவர்கள், ஒருங்கிணைந்து செயல்படுகிறவர்கள்," என்று அவர்கள் சில பொறுப்புகளைப் பகிர்ந்துகொடுப்பார்கள். முதலாவது, "நீங்கள் யார் யார் உங்கள் பொறுப்புகளை எடுக்க முன்வருகிறீர்கள்? எப்படிப் பங்குபெற விரும்புகிறீர்கள்?" என்று கேட்பார்கள். கடைசியில் துறையின் அதிகாரியோ அல்லது தலைமை ஆசிரியரோ அல்லது கணவனோ அல்லது அப்பாவோ, "நீ இதைச் செய்ய வேண்டும்" என்று சொல்வார்கள். உடனே அங்கு இருப்பவர்கள் "எப்போதுமே எனக்குத்தான் நீங்கள் நிறைய வேலை தருகிறீர்கள்," என்று கொடிபிடிப்பார்கள். அப்போது, "இந்தப் பொறுப்பை இவர்களுக்குப் பிரித்துக்கொடுப்பதற்குப்பதிலாக நாமே செய்துவிடலாம்," என்று தோன்றும். அப்படிச் செய்யக்கூடாது. பிரித்துக்கொடுத்துதான் ஆகவேண்டும். அவர்கள் இன்றைக்கு மனம் புண்படலாம்.

ஒருங்கிணைப்பாளர் என்று ஒருவரை நாம் ஏற்றுக்கொண்டால், அவர் என்ன பகிர்ந்துதருகிறாரோ அதை எந்த முறுமுறுப்பின்றி, தாழ்ந்து பணிந்து அடங்கி நாம் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். "எனக்கு நிறைய வேலை இருக்கிறது. எனக்குத்தான் எப்பொழுதுமே நீங்கள் நிறைய வேலை தருகிறீர்கள்," என்பதல்ல. எந்த ஒரு சமுதாயத்தில், "எனக்கு இன்னும் நிறைய வேலை கொடுத்திருக்கலாமே! இன்னும் நிறையப் பொறுப்புகளைக் கொடுத்திருக்கலாமே!" என்று எல்லாரும் என்றைக்கு நினைக்கிறார்களோ, முன்வருகிறார்களோ, அது ஆரோக்கியமான, நேர்த்தியான சமுதாயம். அந்த நிலைமை வரும். புதிய எருசலேமில் எல்லோரும் அப்படிக் கேட்போம். இங்கு உடல் என்று ஒன்று இருக்கிறவரை, களைப்பு என்று ஒன்று இருக்கிறவரை, "கொஞ்சம் குறைத்துக்கொள்ள முடியுமா? இந்த வேலையை என்னுடைய சகோதரனாகிய இவரிடம் கொடுங்கள்," என்றுதான் சொல்வோம். இது என்னுடைய மூன்றாவது குறிப்பு.

கட்டியெழுப்புவது என்ன என்றால், முதலாவது எல்லாவற்றையும் சேர்ந்து செய்கிற வேலை. இரண்டாவது நம்முடைய கூட்டுப் பொறுப்பிலே நம்முடைய பங்கை எடுத்துக்கொள்வது.

### 4. தொடர்புகொள்ளுதல்

நான்காவது, கட்டியெழுப்புவதற்கு நாம் communicate பண்ணவேண்டும். ஒரு கூடுகைக்குப் போக முடியவில்லையென்றால் நாம் தகவல் கொடுக்கவேண்டும். நாடகத்துக்கோ, கிரிக்கெட் விளையாட்டுக்கோ போக முடியவில்லையென்றால் நான் யாருக்கும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், நாம் தேவனுடைய பார்வையில் மிகவும் விலையேறப்பெற்ற ஒரு வேலையைச் செய்துகொண்டிருக்கிறோம். தேவனுடைய மக்கள் மிகவும் நேர்த்தியான முறையில் செயல்படுகிறார்களென்றால், யாராவது ஒருவருக்காவது நாம் சொல்ல வேண்டும். இது நாம் கட்டியெழுப்பப்படுவதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அப்படி வேதாகமத்தில் எந்த வசனமும் இல்லை. ஆனால் வேதாகமத்தில் இருக்கிற எல்லாக் கடிதங்களும் நாம் ஒருவரையொருவர் தொடர்புகொள்ள வேண்டும் என்று சொல்கிறது.

### 5. கலந்தாலோசனை

ஐந்தாவது, நம்முடைய கூட்டுவாழ்க்கையின் காரியங்களை மட்டுமல்ல, நம்முடைய தனி வாழ்க்கையின் காரியங்களையும் நாம் பலவேளைகளில் கலந்தாலோசிக்க வேண்டும். "எப்படிப்பட்ட மடிக்கணினி வாங்க வேண்டும், என்ன வண்டி வாங்க வேண்டும் என்பதையெல்லாம் கலந்தாலோசிக்க வேண்டும்,"

என்று நான் நிர்ப்பந்திக்கவில்லை. ஆனால், வருவாய்க்குமிஞ்சி செலவழிக்கக்கூடாது என்றும், கடன் வாங்கி கடனில் மூழ்கிவிடக்கூடாது என்றும் சொல்லலாம். இப்படிப்பட்ட காரியங்களுக்காகக் கலந் தாலோசிக்க வேண்டும். ஊழியம் செய்வதற்காகவென்று கடன்வாங்கி வண்டி வாங்குகிறார்கள். இந்த மனித வரலாற்றின் மிக ஒப்புயர்வற்ற, ஈடில்லாத, தன்னிகரற்ற ஊழியராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு கோவேறு கழுதையைத் தனக்கும் வைத்துக்கொள்ளவில்லை. தன்னுடைய பன்னிரெண்டு சீடர்களுக்கும் கொடுக்கவில்லை. திறமையாக ஊழியம் செய்வதற்கு வண்டி வேண்டாமா என்றால், ஊழியம் செய்வதற்குப் பரிசுத்தம், அன்பு, நீதி, தியாகம் போன்றவைகள்தான் தேவையே தவிர கார், வண்டிபோன்றவைகள் தேவையில்லை.

நான் காருக்கோ, வண்டிக்கோ, வீட்டுக்கோ எதிராளி இல்லை. கடனை வைத்துக்கொண்டு இவைகளை யெல்லாம் வாங்குவதற்கு நான் எதிராளி. நான் என் அளவுக்கு மீறி தலையிட்டுச் செய்யமாட்டேன். ஆனால், ஆலோசனை பெறலாமா, பெறவேண்டுமா? *"ஆலோசனையினால் எண்ணங்கள் உறுதிப்படும்; நல்யோசனை செய்து யுத்தம்பண்ணு,"* (நீதி. 20:18) என்று வாசிக்கிறோம். இதன் பொருள் "பாஸ்டரிடம் செல்லுங்கள்; பாஸ்டரிடம் கலந்தாலோசியுங்கள்," என்று நான் சொல்லவில்லை. ஒருவேளை ஒருவர் என்னிடம் வந்து, "எப்படிப்பட்ட வண்டி வாங்க வேண்டும்?" என்று கேட்டால், "அதைப்பற்றி எனக்குத் தெரியாது, அதைப்பற்றித் தெரிந்த ஒருவரிடம் கேளுங்கள்," என்று சொல்வேன் அல்லது அதைப்பற்றித் தெரிந்த ஒருவருடைய பெயரைச் சொல்லி, "அவரைப் போய்ப் பாருங்கள்," என்றுதான் சொல்வேனே தவிர, "நான் ஜெபம் பண்ணி வைக்கிறேன், அடுத்த வாரம் வாருங்கள், கர்த்தர் என்ன சொல்கிறார் என்று சொல்கிறேன்," என்று சொல்லமாட்டேன். கர்த்தரிடம் போய் ஜெபித்தால் அவர் ஒன்றேவொன் றைத்தான் சொல்வார். "என் மகனே! இதற்கும் உனக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. உனக்கு மிஞ்சின காரியங்களில் நீ தலையிடாதே," என்பார்.

இதற்கும் கட்டியெழுப்பப்படுவதற்கும் என்ன தொடர்பு? "நான் கலந்தாலோசிக்கவில்லையென்றால் கட்டியெழுப்பப்படமாட்டேனா?" என்றால், கலந்தாலோசிக்கும்போது இந்த மாதிரி காரியங்களில் பல சிக்கல்கள் வரும். நம்முடைய ஞானம், அறிவு, பக்குவம், முதிர்ச்சி, திறமை இவைகளைக்கொண்டுதான் ஒரு ஆலோசனையைத் தரலாம் அல்லது தரக்கூடாது அல்லது ஒரு ஆலோசனையைப் பெறலாம் அல்லது நாம் பெறக்கூடாது.

ஒரு தனிமனித தலைமைத்துவத்தில் எல்லாக் கரியங்களையும் பாஸ்டரிடம் கேட்டு, உறுதிப்படுத்திய பிறகுதான் செய்ய வேண்டும் என்றால் அது மிகவும் திறமையாகச் செயல்படும். அங்கு பாஸ்டரைமிஞ்சி எதுவுமே நடக்காதென்றால் அது மிகவும் பாதுகாப்பானது. அப்படிப்பட்ட ஒரு நடத்துகையையோ அல்லது ஒரு தலைமைத்துவத்தையோ நாம் ஆதரிப்பதில்லை. ஆனால், ஏற்ற நபர்களிடத்திலே நாம் கலந்தாலோசிப்பது நல்லது. உங்கள் நம்பிக்கைக்குரியவர்களிடத்தில் கலந்தாலோசியுங்கள்.

ஒருவர் என்னிடத்தில் வந்து ஒரு ஆலோசனையைக் கேட்டால் நான் அந்த ஆலோசனையைக் கொடுத் துத்தான் ஆகவேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இல்லை. "இந்தக் காரியத்தில் என்னால் ஆலோ சனை தரமுடியாது. ஆனால், இவரிடம் போனால் நல்ல ஆலோசனை கிடைக்கும்," என்று என்னால் சொல்லமுடியும்.

### 6. தாங்குதல்

கடைசியாக, எல்லாவற்றையும் நாம் செய்ய முயன்றாலும் கண்டிப்பாக தேவமக்களுடைய சமுதாய வாழ்க்கையிலே அவர்கள் கட்டியெழுப்பப்படுவதற்கு **தாங்குவது, பொறுப்பது, சகிப்பது** என்பது அதிக மாய்த் தேவை. *"ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்"* (கொலோ. 3:13). சமுதாய வாழ்க்கையிலே தவறுகள் நடைபெறும். ஒருவர் தன்னுடைய பங்கைச் செய்யாதபோது, அந்தப் பங்கு இன்னொருவருடைய தலைமேல் விழும். பத்துப்பேருக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. அதில் ஒருவர் தன்னுடைய பங்கை நிறைவேற்றவில்லை. நிறைவேற்றத் தவறுகிற அந்தப் பங்கு ஒன்பதுபேர் தலை யிலே விழும். அப்பொழுது, "இவர் எப்பொழுதும் தன்னுடைய பங்கைத் தட்டிக்கழிக்கிறார்," என்ற உணர்வு அந்த ஒன்பது பேருக்கு வருமா? வரும். எனவேதான், *"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்,"* (கலா. 6:2) என்று பவுல் சொல்லு கிறார். ஒருவர் பாரம் என்றால் என்ன அர்த்தம்? ஒருவன் ஒரு பங்கில் தவறுவதால், தன்னுடைய தனி வாழ்க்கையிலேயோ அல்லது சமுதாய வாழ்க்கையிலேயோ தவறுவதால், அவன் மற்றவர்களுக்குக் கூடுதலான பளுவை, கூடுதலான சுமையை, சுமத்துகிறான். நாம் என்ன செய்யவேண்டும், இந்த மாதிரி ஆட்களையெல்லாம் வெட்டி எறிந்துவிடலாமா? தவறுகின்ற சகோதரர்களை சகோதரிகளை நாம் தாங்க வேண்டும், பொறுக்கவேண்டும், சகிக்கவேண்டும்.

“ஆண்டவரே, உம்முடைய வருகைவரையில் இந்த அருமையான சகோதரனோடு அல்லது சகோதரி யோடுதான் என்னுடைய சமுதாய வாழ்க்கை என்றால் பிதாவே! என் சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது,” என்ற மனப்பாங்கு நமக்கு வேண்டும். அதற்காக நாம் மிகவும் களிகூர வேண்டுமா? எந்த நிலைமையிலும் நாம் நம்முடைய மகிழ்ச்சியைத் தக்கவைத்துக்கொள்ளக் கற்றுக்கொள்ள வேண் டும். நிச்சயமாக தேவன், என்றைக்காவது ஒருநாள், நம்முடைய பொறுமை, நம்முடைய தாங்குதல், நம்முடைய சகிப்பு ஆகியவைகளைமுன்னிட்டு அந்தச் சகோதரனை, அந்தச் சகோதரியை, அவர் தொடுவார், மாற்றுவார்.

தேவன் கட்டிக்கொண்டிருக்கிற இந்த மாபெரும் வேலையிலே நாம் பங்காளிகளாக இருக்கின்றோம், தேவனுடைய இல்லம். முதலாவது **நாம் சேர்ந்து வாழ்வதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம்.** இரண்டா வது, **நம்முடைய கூட்டுப்பொறுப்பிலே நமக்குப் பங்கு உண்டு;** அப்பொழுது நாம் கட்டியெழுப்பு கிறோம். மூன்றாவது, **ஒருங்கிணைக்கின்ற சகோதர சகோதரிகளுக்கு நாம் அடிபணிந்து, கீழ்ப்படிந்து, அடங்கி நாம் நம்முடைய பங்குகளை நிறைவேற்றுவதின்மூலமாக நாம் கட்டியெழுப்புகிறோம்.** நான் காவது, **நாம் ஒருவருக்கொருவர் தொடர்புகொள்வதினால் நாம் கட்டியெழுப்பப்படுகிறோம்;** தொடர்பு கொள்ளாததினால் நாம் கட்டியெழுப்பப்படுவதில்லை. ஐந்தாவது, நம்முடைய தனிப்பட்ட காரியங் களாக இருந்தாலும் அதற்குரிய கொடையும், ஞானமும், அறிவும், பக்குவமும் முதிர்ச்சியும் உள்ள **தேவமக்களிடம் கலந்தாலோசிப்பதினால் நாம் கட்டியெழுப்பப்படுகிறோம்**. கடைசியாக, இவை எல்லா வற்றிற்கும்மேல் வீழ்ச்சிகளும் தோல்விகளும் இருக்கும்போது **நாம் ஒருவரையொருவர் தாங்குகிறோம்.** Praise the Lord!